தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் 9, திங்கட்கிழமை

ஐப்பசி 23, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. அ. வெள்ளத்துரை 11—5—1987 ஆம் தேதியன்றும், திரு. து. ஐசரிவேலன் 14—5—1987 ஆம் தேதியன்றும், திரு. சு. அங்குச்சாமி 22—5—1987 ஆம் தேதியன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களான திரு. ஆர். வெங்கடாரெட்டி 11—8—1987 ஆம் தேதியன்றும் திரு. எஸ். கே. சாமிக்கவுண்டர் 3—10—1987 ஆம் தேதியன்றும், பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அரசுத் தலைமைக் கொறடாவுமான திரு. து. ப. அழகமுத்து 5—10—1987 ஆம் தேதியன்றும், திரு. எஸ். கணேசன் 10—10—1987 ஆம் தேதியன்றும், திரு. சு. சீனிவாசன் 23—10—1987 ஆம் தேதியன்றும், திரு. மு. சுந்தரம் 29—10—1987 ஆம் தேதியன்றும் மற்றும் திரு. அ. பொ. அரசு 7—11—1987 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. வெள்ளத்துரை அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணி யாற்றியுள்ளார்.

திரு. து. ஐசரிவேலன் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை சென்னை நகரம் டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி யுள்ளார். மேலும் அவர் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் பேரவைச் செயலாளராகவும் (Parliamentary Secretary) சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு.ச. அங்குச்சாமி அவர்கள் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி யுள்ளார்.

திரு. ஆர். வெங்கடா ரெட்டி அவர்கள் 1946-ஆம் ஆண்டி லிருந்து 1952 ஆம் ஆண்டு வரை சித்தூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். கே. சாமிக் கவுண்டர் அவர்கள் 1946 ஆம் ஆண்டி லிருந்து 1952 ஆம் ஆண்டு வரை கோபிசெட்டிப்பாளையம் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. து. ப. அழகமுத்து அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியிலிருந்தும், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு

1987 நவம்பர் 9] [பேரவைத் தலைவர்]

வரையிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியிலிருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை அரசுத் தலைமைக் கொறடாவாகவும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். கணேசன் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் செம்பனார்கோவில் தொகுதியிலிருந்தும், 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் குத்தாலம் தொகுதியிலிருந்தும், 1977 ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் பூம்புகார் தொகுதியிலிருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சு. சீனிவாசன் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் போடிநாயக்கனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மு. சுந்தரம் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையிலும் தென்னார்க்காடு மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வ. பொ. அரசு அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை செங்கற்பட்டு மாவட்டம் திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் 1959 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் மேயராகவும் பதவி வகித்தார்.

[பேரவைத் தலைவர்] [1987 நவம்பர் 9

அன்னார்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

2. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் மறைவு குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்திய சுதந்திரப் போரில் பங்கு கொண்ட மூத்த முதுபெரும் தலைவர்களில் ஒருவரும், விவசாயி மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவரும், இந்தியாவின் முன்னாள் பிரதம அமைச்சருமான திரு. சரண் சிங் அவர்கள் 29—5—1987 ஆம் நாளன்று மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது.

அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவிக்கிறது."

இந்தியாவினுடைய முன்னாள் பிரதமரும், லோக் தள கட்சியினுடைய தலைவரும், இந்தியாவினுடைய முதுபெரும் தலைவர்களிலே ஒருவராகத் திகழ்ந்தவருமாகிய திரு. சரண்சிங் தம்முடைய 85-வது வயதில் மே திங்கள் இறுதியில் இயற்கை எய்தினார்கள் என்ற துக்கச் செய்தி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது என்பதை நாம் நன்கு அறிவோம்.

அவர் மிகமிக சாதாரணமான ஒரு விவசாயக் குடும்பத்திலே தோன்றி படிப்படியாக உழைப்பால் உயர்ந்து எல்லோருடைய அன்பையும் ஆதரவையும் பெற்று, இந்தியாவிலேயே மிகச் சிறந்ததொரு இடத்தைப் பெற்றவர் அவர் என்பதை நாம் நன்கு